பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 01 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதையொட்டி, அனைத்துக் கட்சிக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.
3. ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தளவாடங்கள் பயன்படுத்தப்பட்டதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
4. பல்கலைக்கழக மானியக்குழுவின் புதிய நெறிமுறைகள் கல்லூரிகளில் சாதி வேறுபாட்டை ஒழிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது

--இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகை செய்யும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு. **Antonio Costa** மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி. **Ursula Von Der Leyen**-வுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின், வர்த்தகம், பாதுகாப்பு, ராணுவ பங்களிப்பு, பேரிடர் மேலாண்மை, பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

அப்போது பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த ஒப்பந்தம், இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு. **Antonio Costa** பேசுகையில் இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்று கூறினார்.

ஐரோப்பிய யூனியன் - இந்தியா இடையேயான உறவுகளில் புதிய அத்தியாயம் இது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் வளர்ச்சியின் மூலம், உலக பொருளாதாரம் மேம்படும் என்று ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி. **Ursula Von Der Leyen** கூறியுள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தகத்திற்கான ஒப்பந்தத்தை இந்திய தொழில் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இந்த கூட்டமைப்பின் தலைமை இயக்குநர் திரு சந்திரஜித் பானர்ஜி வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும் உலக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதம் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் மூலம், இந்திய தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதிக்கு 99 சதவீதம் முன்னுரிமை அளிக்கப்படுவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு ஆனந்த் கோயங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஒப்பந்தம் மூலம் நாட்டின் ஏற்றுமதி அதிகரிக்கக்கூடும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதையொட்டி, அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று நடைபெற்றது.

புதுதில்லியில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாநிலங்களவை முன்னவர் திரு ஜெ பி நட்டா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர்கள் டாக்டர் எல். முருகன், திரு அர்ஜூன் ராம் மெக்வால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

காங்கிரஸ் கட்சி சார்பாக, திரு ஜெயராம் ரமேஷ், திமுக-வின் திருச்சி சிவா, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சாகரிகா கோஸ், சமாஜ்வாதி கட்சியின் திரு ராம்கோபால் யாதவ், உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் சார்பாக கலந்துகொண்டனர்.

நாளை தொடங்க உள்ள பட்ஜெட் கூட்டத்தொடர், ஏப்ரல் 2-ஆம் தேதிவரை இரண்டு கட்டங்களாக நடைபெறுகிறது.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட தளவாடங்கள் பயன்படுத்தப்பட்டதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளை கௌரவிக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த

நிறுவனத்தின் தொழில்நுட்பம் ஆபரேஷன் சிந்தூரின்போது வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேம்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ராணுவ தளவாடங்கள் மூலம், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த **2014-**ஆம் ஆண்டில், ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இருந்த ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி, தற்போது **24** ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இதனை வரும் **2030-**ஆம் ஆண்டுக்குள் **50** ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டில் சிவில் விமான போக்குவரத்துத் துறையில், சர்வதேச விமான நிறுவனங்கள் இணைவது பிரதமர் திரு நரேந்திர மோடியின் உடான் திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரேசில் விமான நிறுவனமான **Embraer** மற்றும் அடானி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பின்னர் சமூக வலைதளத்தில் அமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில், இதன்மூலம் நாட்டில் சிவில் விமான போக்குவரத்து மேம்படும் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>

பல்கலைக்கழக மானியக்குழுவின் புதிய நெறிமுறைகள், கல்லூரிகளில் சாதி வேறுபாட்டை ஒழிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கல்லூரி வளாகங்களில் வேறுபாட்டை தடுப்பதற்கான பொறுப்பு மத்திய — மாநில அரசுகளுக்கும், பல்லைக்கழக மானியக்குழுவுக்கும் இருப்பதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக, உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நெறிமுறைகள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, கடந்த 13-ஆம் தேதி பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், உயர்கல்வி நிறுவனங்களில் சம வாய்ப்பு மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருந்தது.

இதன்மூலம், மாணவர்கள் தடையின்றி கல்வி பயில்வதற்கான சூழல் ஏற்படுத்துவதை உறுதி செய்ய வழிவகை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கேற்ப, **Sutlej - Yamuna** இணைப்புக் கால்வாய் பிரச்சினைக்கு தீர்வு காண, ஹரியானா - பஞ்சாப் மாநில முதலமைச்சர்கள் கூட்டம் இன்று சண்டிகரில் நடைபெற்றது.

பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த் மான், ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இரு மாநிலங்களின் நீர்வளத்துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. நயாப் சிங் சைனி, இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றதாக தெரிவித்தார்.

நீர் என்பது உலகளாவிய பிரச்சினை என்று கூறிய திரு. பகவந்த் மான், நீர் சேமிப்பிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

நாட்டில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்த புத்தாக்க ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது என்று மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புனேயில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ், உள்நாட்டு தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஆராய்ச்சி நிறுவனங்களும், தொழில்முனைவோரும் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திரு ஹெச் டி குமாரசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நாகை கடலோரப்பகுதியில் மீன்வளத்தை பெருக்க 12 கோடி ரூபாய் மதிப்பில் செயற்கை பவளப்பாறைகள் கடலுக்கு அடியில் அமைக்கும் பணி இன்று தொடங்கியது.

நாகூர், பட்டினச்சேரி மீன்பிடி துறைமுகத்தில் இந்த பவளப்பாறை அமைக்கும் பணி தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 42 Sec. )*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------------

**Bulawayo**-வில் நடைபெற்று வரும், **19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் **353** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் ஜிம்பாப்வே சற்றுமுன்வரை **23** ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **75** ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, பேட் செய்த இந்தியா **8** விக்கெட் இழப்பிற்கு **352** ரன் எடுத்தது.

அதிகபட்சமாக, **Vihaan Malhotra 109** ரன் எடுத்தார்.

------------------

ஹைதாரபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணுவர்தன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் Thanapet Chanta -ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>**